# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. நிலத்துல சரியான விளச்சல் இல்ல.

   நிலத்தில் சரியான விளைச்சல் இல்லை.

2. அவன் புத்திசாலித்தனமா பதில் சொன்னான்.

   அவன் புத்திசாலித்தனமாக பதில் கூறினான்.

3. இந்த வருசம் மழயே பெய்யல.

   இந்த வருடம் மழையே பெய்யவில்லை.

4. ராமன், அரண்மனைல வேல பாக்குறான்.

   ராமன், அரண்மனையில் வேலை பார்க்கின்றான்.

5. நா நல்லா இருக்கேன்.

   நான் நன்றாக இருக்கின்றேன்.

6. ஒம் பேரு, விலாசம் சொல்லு.

   உன் பெயர், முகவரி கூறு.

7. கடமயச் செய். பலன எதிர்பாக்காத.

   கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே.

8. புத்தாண்ட நீ எப்டி கொண்டாடுவ?

   புத்தாண்டை நீ எப்படி கொண்டாடுவாய்?

9. இந்தியாவோட தலைநகரம் எது?

   இந்தியாவின் தலைநகரம் எது?

10. அவன் ரொம்ப நல்லாப் படிப்பான்.

    அவன் மிகவும் நன்றாகப் படிப்பான்.